28 காலணா Regd. No. M. 2811

சுதந்திரச்சங்கு


"சங்கு கொண்டே வெற்றி யூதுவோமே—இதைத்
தரணிக்கெல்லா மெடுத்தோதுவோமே"

வாரம் மும்முறை வெளிவரும்
வருட சந்தா 4½ ரூபா

ஆசிரியர்:
சங்கு. ஸுப்ரஹ்மணியன்.

போன் நெ. 8088 பைக்ராப்ட்ஸ் சாலை, திருவல்லிக்கேணி, சென்னை. திங்கள் 3-4-33

இந்தியாவும் இயேசுநாதரும்



எப்ரல் 3-ம் தேதியான இன்று உலகில் ஒரு துக்ககரமான தினம். இன்றைக்குச் சரியாக 19 நூற்றுண்டுகளுக்கு முன்னே ஒரு பெரிய மகானின் முதுகில் சிலுவையை ஏற்றி அவரைச் சுமந்து செல்லச் செய்து பிறகு அதிலேயே அவரை ஏற்றி ஆணி யறைந்தார்கள். அன்று அந்த அகிம்சா தர்ம மூர்த்தி சிலுவையைச் சுமக்கச் செய்ததை யொப்ப, இன்று அகிம்சா தர்மத்தைப் புகட்ட முற்பட்ட இந்தியாவின் முதுகில் 'வெள்ளைக் கடுதாசி' என்ற சிலுவையை ஏற்றியிருக்கின்றனர். இந்தியா இச் சிலுவையில் அடிக்கப் படுமோ?

கார்ப்பொரேஷன் மீது பாய்ச்சல்

இந்தியாவில் எத்தனையோ முனிசிபாலிட்டிகள் இருக்கின்றன. எவ்வளவோ கார்ப்பொரேஷன்கள் இருக்கின்றன. எல்லாவற்றையும் விட மிகச் சிறப்பாக நடந்து வருவது கல்கத்தா கார்ப்பொரேஷன்தான். அது காங்கிரஸ்காரர்களால் நடத்தப்படுவதால் அவ்வளவு சிறப்பாக நடந்து வருகின்றதென்பது அனைவரு மறிந்த விஷயம். காங்கிரஸ் சம்பந்தப்பட்ட எதையும் கொன்று போட வேண்டுமெனப் புறப்பட்டுள்ள சர்க்காருக்கு, சில காலமாக கல்கத்தா கார்ப்பொரேஷன் கண்ணை உறுத்திக் கொண்டிருக்கிறது. ஆகவே அந்தக் கார்ப்பொரேஷனின் நிர்வாகத்தைக் குட்டிச் சுவராக்கி விடுவதென சர்க்கார் தீர்மானித்து விட்டனர். அதற்காக '1932 முனிஸிபல் மசோதா' என்று ஒரு அநீதியான மசோதாவை வங்காள சட்ட சபையில் கொண்டு வந்திருக்கின்றனர். அந்த மசோதாவிலுள்ள பிரிவுகளைப் பார்த்தால் இனி கல்கத்தா கார்ப்பொரேஷனின் பெருமை அழிந்தே போகும் என்று எண்ண வேண்டி யிருக்கிறது. அந்த மசோதாவின் உறுமல்களில் சிலவற்றைப் பாருங்கள்.

"ராஜீய காரணங்களுக்காகத் தண்டனை யடைந்த எவனுக்கும் இனி கார்ப்பொரேஷனில் உத்தியோகம் தரக் கூடாது. தண்டனை யடைந்தவர்கள் இப்போது உத்தியோகத்திலிருப்பார்களாயின் அவர்களையும் விரட்டி விட வேண்டும். சிறைத் தண்டனை யடைந்தவர்களால் நடத்தப்படும் பள்ளிக்கூடங்களுக்கு 'கிராண்ட்' தரக் கூடாது. உத்தியோகத்துக்கு வருவதற்கு முன் ஒவ்வொருவனும் "நான் தண்டிக்கப் படாதவன்" என்று உறுதி மொழிப் பத்திரத்தில் கையெழுத்திட வேண்டும். தவறுதலாக யாராவது கையெழுத்திட்டால் 500 ரூபா அபராதமும் 1 வருடச் சிறைவாஸமும் தண்டனை கொடுக்கப்படும். கவுன்ஸிலர்களால் வோட்டு செய்யப்பட்ட எந்த மான்யத்தையாவது சர்க்கார் நிராகரித்து விட்டால், மேற்படி பணம் கவுன்ஸிலர்களிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டும். அந்தப் பணத்தை ஒரு மாதத்தில் தராத கவுன்ஸிலர் தனது பதவியை இழந்து விடுவான்" என்று அநேக விதமான கத்திகள் அந்த மசோதாவில் மின்னுகின்றன.

வங்காளத்தில் இன்றைக்கு யதேச்சாதிகாரம் அமுலிலிருந்து வருகிறது. எவனை வேண்டுமானாலும் பிடித்து விசாரணையின்றி சிறையில் போட்டுவிட குட்டி யதிகாரிகளுக்கு அங்கு அதிகாரமிருந்து வருகிறது. இந்த ரீதியில் எத்தனையோ ஸமூக ஊழியர்கள் காரணமிருந்தோ, காரண மில்லாமலோ சிறைத் தண்டனை அடைந்து வருகின்றனர். இதை ஒரு ஆயுதமாகக் கொண்டு அநேக கார்ப்பொரேஷன் உத்தியோகஸ்தர்களைத் தொலைத்து விட சர்க்கார் தீர்மானித்து விட்டனர் போலும்! அது மட்டு மன்று. எந்தக் கவுன்ஸிலரும் எந்தச் சமயத்தில் வேணுமானாலும் கார்ப்பொரேஷனிலிருந்து துரத்தப்படுவதற்கு சவுகரியமாக சர்க்கார் புதிய வழிகளைச் சிருட்டித்துக் கொள்ள விரும்புகின்றனர். என்ன அநியாயம்! என்ன அநியாயம்!

கல்கத்தா கார்ப்பொரேஷனைத் தேசிய மயமாக்க வேண்டு மென்று காலஞ் சென்ற சித்தரஞ்சன தாஸர் அரும்பாடு பட்டார். அவருடைய உழைப்பு பலனளித்தது. பிறகு ஸ்ரீயுத சென்குப்தாவும், சுபாஷ் சந்திர போஸும் அந்தத் தேசிய மணங் கெடாதவாறு காத்து வந்தனர். சமீபத்தில் நடந்த தேர்தலில் கூட 75 ஸ்தானங்களில் 54 இடங்களை காங்கிரஸ்காரர் கைப்பற்றியதாகச் செய்தி கிடைத்துளது. இப்போதே கல்கத்தா பிரமுகராகிய சென் குப்தா சிறையிலிருக்கின்றார். ஸுபாஷ் பாபு அந்நிய நாட்டில் நோயாய்க் கிடக்கின்றார். இவர்களிருவரும் இல்லாததுதான் சமயமென்று நினைத்து சர்க்கார் ஓர் மசோதாவைத் தயாரித்துக் கொண்டு, கல்கத்தா கார்ப்பொரேஷனிலிருந்து காங்கிரஸைத் தொலைத்து விட சூழ்ச்சி செய்கின்றனர். இது தர்மமா?

அரசாங்க முறையின் போக்கு இப்படியே போய்க் கொண்டிருக்குமாகில் காங்கிரஸ்காரர் கவுன்ஸிலைக் கைப்பற்றியும் பிரயோசன மில்லை; கார்ப்பொரேஷனைப் பிடித்தும் பயனில்லை; எல்லாம் வீணே. ஆகவே அரசாங்க முறையை மாற்றுவதே தேச மக்களின் முதற் கடமை யென்பது விசதமாகிறது. இந்த மசோதாவை சர்க்கார் நிறைவேற்றி விடுமானால், தேச மக்களின் எதிர்ப்பும் அதிகமாகு மென்பதை அறிவுறுத்துகின்றோம்.

மகா தியாகம்

(தபாற்கூலி யுள்பட 5 அணு ஸ்டாம்பு அனுப்பவும்.)

"நன்றி மறந்த கழுதை!"

வண்ணான் தன் வீட்டில் ஒரு பையனுக்கு சோறு போட்டு வளர்த்து வந்தான். ஒரு நாள் குளத்தங்கரையினின்று துணி மூட்டையைக் கழுதையின் முதுகில் போட்டு ஓட்டிக்கொண்டு அந்தப் பையன் வந்து கொண்டிருந்தான். அந்தப் பையனுக்கு கெட்ட புத்தி உதித்தது. கழுதையைக் காட்டில் அடித்து விரட்டி விட்டு, துணி மூட்டையைத் தூக்கிக் கொண்டு அவன் ஓடிப் போய் விட்டான். வழி தெரியாது கழுதை காட்டில் மேய்ந்து கொண்டிருந்தது.

வீட்டில் வெகு நேரம் வரை வண்ணான் காத்திருந்தும் பையனையும் காணோம்; கழுதையையும் காணோம். ஆகவே அவன் தேடப் புறப்பட்டான். வெகுநேரம் தேடிய பின்பு காட்டில் கழுதை அகப்பட்டது. வெறும் முதுகோடிருந்த கழுதையைக் கண்டபோது வண்ணானுக்குப் பையனின் யோக்யதை தெரிந்தது.

"அட நன்றி கெட்ட கழுதைப் பயலே!" என்று ஆத்திரத்தோடு வண்ணான் கூறினான். அதைக் கேட்ட கழுதைக்குக் கோபமுண்டாயிற்று. "ஏன் அந்தப் பயலை எனக்கு ஒப்பிட்டுப் பேசுகின்றாய். நான் கழுதை ஜன்மமாயிருந்தாலும் அவனைப் போல நன்றி கெட்டு எப்போதாவது நடந்து கொண்டேனா! என்னை விடக் கேவல புத்தியுடைய அவனை, என்னோடு ஒப்பிட்டுப் பேசாதே" என்று கழுதை கூறிற்று. அதைக்கேட்ட வண்ணான், "கழுதையே! நன்றி கெட்ட அந்தப் பயல் உன்னை விடக் கேவலமே!" என்று கூறினான். கதை முடிந்தது! காக்கை பறந்தது!

பார்லிமெண்டில் பால்ட்வின் என்பார் பேசியபோது "என்னைக் கழுதை யென்று நினைத்தே ஹூல்மர் பேசினார்" என்று குறிப்பிட்டார். இந்திய அரசியலை சுமப்பதில் பால்ட்வினுக்கும் பங்குண்டு. ஆனால் அவருக்குக் கூட லார்ட் ஹூல்மர், மிஸ்டர் சர்ச்சில் முதலியவர்கள் இந்தியாவுக்குத் துரோகமாக பேசிய பேச்சு பிடிக்க வில்லையாம். சர்ச்சிலும், ஹூல்மரும், அவர் வர்க்கத்தினரும் இந்தியாவின் காசை ஏராளமாகத் தின்று ஏப்பம் விட்டவர்கள். ஆனால் "நன்றி மறந்து" இப்போது பேசுகின்றனர். கதையில் வந்த பையனின் நிலையில் இந்த கோஷ்டி இருக்கிறதென்பதை விவரிக்காதிருப்பதே நல்லது!

ஒரு '0' செய்த விஷமம்

பன்றி யிறைச்சி கதை

ஒரு '0' என்ன விஷமம் செய்து விடுமென்று தெரியுமா? ஒட்டாவாவில் பிரிட்டிஷ் சாம்ராஜ்ய நாடுகளெல்லாம் கூடி ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டார்களே, அந்த ஒப்பந்த தஸ்தாவேஜியில் ஒரு 'சுன்னம்' எப்படியோ நுழைந்து அபாரமான விஷமம் செய்திருக்கிறது.

வருடா வருடம் கானடா தேசத்திலிருந்து ஏராளமாக உப்புப் போட்ட பன்றி மாமிசத்தை வரவழைத்து பிரிட்டிஷார் சாப்பிட்டு வருகின்றனர். ஆகவே மேற்படி ஒட்டாவா மகா நாட்டில் ஒப்பந்தப் பேச்சு நடக்கும் போது 'வருடா வருடம் கானடா, 250,000 *cwt.* எடை யுடைய உப்புப் போட்டதான பன்றி யிறைச்சியை பிரிட்டனுக்கு அனுப்பலாமென்று" ஏற்பாடு செய்து கொண்டார்கள். அந்த ஒப்பந்த தஸ்தாவேஜியை 'டைப்' அடித்த குமாஸ்தா 25,00,000 என்று அச்சடித்து விட்டான். 2½ லக்ஷம் என்பது 25 லக்ஷமாக ஆகிவிட்டது! அதைப் பாராமல் மேற்படி தஸ்தாவேஜில் கானடா பிரதிநிதியும், பிரிட்டனின் பிரதிநிதியும் கையெழுத்திட்டு விட்டார்கள். '0' செய்த விஷமம் வெற்றியடைந்தது!

இப்போது தான் தஸ்தாவேஜைக் கவனித்து, பிரிட்டனின் பிரதிநிதி, தவறை அறிந்து கொண்டாராம். 25 லக்ஷம் *cwt.* எடையுள்ள பன்றி யிறைச்சியை வாங்கித் தின்பதற்கு பிரிட்டனால் முடியவே முடியாதாம். ஆகவே ஒரு '0' வை வாபீஸ் வாங்கிக் கொள்ள வேண்டுமென்று பிரிட்டனின் பிரதிநிதி கானடாவுக்கு எழுதி யிருக்கிறாராம். தஸ்தாவேஜு எப்போது கை யெழுத்தாகி விட்டதோ, இனி அதை மாற்ற முடியாதெனவும், அவ்வளவு இறைச்சியையும் இனி பிரிட்டன் விழுங்கியே தீரவேண்டு மெனவும் கானடா பிரதிநிதி அபிப்பிராயப் படுகின்றாராம். இப்போது 'திரு திரு' வென்று பிரிட்டனின் பிரதிநிதி விழிக்கின்றாராம். இப்பேர்ப்பட்ட 'ஸீரோ' பேர் வழிகள் தான் ஒட்டாவாவில் கூடி ஒப்பந்தம் செய்து கொண்டார்கள்! இந்த மாதிரி எத்தனை விஷயத்தில் இந்தியாவினின்று சென்ற பிரகஸ்பதிகளும் கோட்டை விட்டிருக்கிறார்களோ யார் கண்டது?

துண்டு துணுக்குகள்

“ஏப்ரல் மடையர்கள் !”

எந்தக் கல்கத்தாவில் காங்கிரஸ் மகா சபை கூடலாகாதென சர்க்கார் தடுத்தார்களோ அதே கல்கத்தாவில் 15உ யன்று மிதவாதிகள் கான்பரன்சு கூடப் போகிறார்களாம். தங்கள் கான்பரன்ஸுக்கு ஏப்ரல் மாதத்தையா பொறுக்க வேண்டும்? ‘ஏப்ரல் மடையன்’ (April fool) என்பது பிரஸித்த மாச்சுதே! அவர்களும் பிரிட்டிஷாரின் வெள்ளைக் கடுதாசியைக் கண்ட துண்டமாகக் கிழிக்கப் போகிறார்களென்று தெரிகிறது. ஆகவே கல்கத்தா போலீஸ் கமிஷனர் அந்தக் கான்பரன்ஸையும் தடுப்பாரா? மாட்டாரா? தடுத்தால் ‘ஏப்ரல் மடையர்’ நாடகம் வேடிக்கையா யிருக்கும். அலகாபாத்தில் சாப்ருவுக்கு 144 போட்ட மாதிரி, கல்கத்தாவில் எல்லா மிதவாதிகளையும் தடுத்தாலும் தடுக்கலா மன்றோ! ‘ஆனால் மிதவாதிகள் வழ வழா பேர்வழி தானே’ என்று நினைத்து கான்பரன்ஸை சர்க்கார் அநுமதித்தாலும் அநுமதிக்கலா மன்றோ!

“ஹா! 10 கோடியா?”

“ஸைகோனில் கேவலம் பிராமிசரி நோட்டின் மீது நமது நாட்டுச் செட்டிமார்கள் 10 கோடி ரூபாய் கடன் கொடுத்திருக்கிறார்கள். அவ்வளவையும் அவர்கள் இழப்பதா?” என்று டெல்லி சட்ட சபையில் ஒருவர் கேட்ட போது சபையோரனைவரும் ‘ஹா! 10 கோடியா?’ என்று வாயைப் பிளந்தார்களாம். ‘அந்தப் பத்து கோடியையும் இந்தியாவுக்குக் கொணர்ந்து நமது கைத்தொழிலுக்கு செட்டிமார் ஏன் உதவலாகாது’ என்று டெல்லிப் பத்திரிகை யொன்று எழுதி யிருக்கிறது. ஓய் ஆசிரியரே! அந்தப் பத்து கோடியை வசூல் செய்ய ஆரம்பித்த செட்டிமார்களைத் தான் பிரெஞ்சு அரசாங்கம் இன்றைக்கு விரட்டி விட்டது என்பதைத் தெரிந்து கொள்ளும்!

அடிமையின் ரோஷம்

ஐரோப்பியர்களுக்கென்று பிரத்தியேகமாக சில விளையாட்டுச சங்கங்கள் இந்தியாவில் இருக்கின்றன. அந்தச் சங்கங்களில் இந்தியர்களையும் சேர்த்துக் கொள்ளாதிருப்பது தவறு என்று ஸர். செத்தல் வாடு என்ற மிதவாதி ஓர் கட்டுரை எழுதி யிருக்கின்றார். சுயமரியாதையுடைய இந்தியர்களெவரும், ஜாதி வித்தியாசமும், நிற வித்தியாசமும் பாராட்டும் எந்தச் சங்கத்தையும் ஏறெடுத்தும் பார்க்க மாட்டார்கள். ஆனால் இந்தியாவின் அடிமைத் தனத்தை கொஞ்சம் கொஞ்சமாக செத்தல்வாடு உணரத் தொடங்கி யிருக்கின்றார் போலிருக்கிறது. “புதுத் துடைப்பம் நன்றாய்ப் பெருக்கும்” என்பார்கள். புதிய உணர்ச்சி பெற்ற செத்தல்வாடு அடிமையின் ரோஷத்தைக் கக்கி யிருக்கிறார். ஷ ஐரோப்பியச் சங்கங்கள் எப்படி நாசமாய்ப் போனாலும் உண்மையான தேச பக்தனுக்குக் கவலை யில்லை.

மீன் மீனை விழுங்கும்!

பார்லிமெண்டில் இந்தியாவைப் பற்றிய வாக்குவாதம் எப்படி யிருந்தது என்று ஒருவர் கேட்டார். தொழிற் கட்சியாரை கன்ஸெர்வேடிவ் விழுங்கினான்; கன்ஸெர்வேடிவ்களை ஸாமுயேல் ஹோர் விழுங்கினான். ஸாமுயேல் ஹோரை சர்ச்சில் விழுங்கி விட்டான். எல்லாம் மீன் கதையைப் போலவே யிருந்தது. குட்டி மீனை சிறிய மீன் விழுங்குவதும், சிறிய மீனைப் பெரிய மீன் விழுங்குவதும், பெரிய மீனை பூத மீன் விழுங்குவதும் வழக்க மன்றோ! ஆகவே பார்லிமெண்டு, மீன் கும்பலாகவே யிருந்தது.

சுதேசி சாகின்றது!

அஹமதாபாத்தில் ஆயிரக்கணக்கான மில் தொழிலாளர்கள் வேலையை விட்டு அனுப்பப் படுவார்களாம். அநேக துணி ஆலைகள் சாத்தப்படலாமாம். விற்பனையாகாது ஏராளமான சுதேசித் துணிகள் தங்கிக் கிடப்பதே காரணமாம். ஜப்பானிலிருந்து ஏராளமான சாமான்கள் குறைந்த விலையில் வந்து குவியுமாறு அரசாங்கம் விட்டு விட்டபடியினால் இந்தியாவில் சுதேசித் தொழில்கள் செத்துக் கொண்டிருக்கின்றன. கற்கண்டும், சிமிட்டியும் கப்பல் கப்பலாக ஜப்பானிலிருந்து வந்து இறங்குவதை அரசாங்கம் வெறுமனே பார்த்துக் கொண்டிருக்கிறது. ஒட்டாவா ஒப்பந்தத்தின் பயனாக ஏராளமான சீமைச் சரக்குகள் வந்து இந்திய சுதேசி யியக்கத்தைக் கொல்வதற்கும் இடமேற்பட்டிருக்கிறது. “சுதேசித் தொழிலை வளர்ப்பதில் எங்களுக்கும் சிரத்தை யுண்டு” என்று வாய் வீச்சு வீசும் வில்லிங்டன் துரை, இப்போது என்ன செய்யப் போகிறாரென்று பார்ப்போம். இப்படியே இன்னும் சில மாதங்கள் விட்டு விட்டால், இந்தியாவின் சுதேசிய இயக்கம் அடியோடு செத்துப் போய் விடுமென்றே பயப்பட வேண்டி யிருக்கிறது.

எல்லைப்புற காந்தி துயரம்

மனிதனை ஓர் மிருகமாக ஆக்கி, பிறகு இயந்திரம் போலச் செய்து விடுவது சிறை வாழ்க்கை. அதே கம்பிகள்! அதே பூட்டுகள்! அதே வார்டர்! அதே முற்றம்! அதே விதமான சோறு! இந்த மிருக-யந்திர வாழ்க்கையிலும் கைதிக்கு இன்ப மேற்படும் சமயங்களுண்டு.

"அடுத்த வாரத்தில் எனது உறவினர் என்னை 'இண்டர்வியூ' காணப் போகிறார்களாம்; குழந்தையைப் பார்க்கலாம்; மனைவியைப் பார்ப்பேன்" என்று கைதி இன்னொரு கைதியிடம் அடிக்கடி சொல்லி சந்தோஷப்படும் காக்ஷிகளை நாம் கண்ணுறக் கண்டிருக்கிறோம்; அநுபவித்து மிருக்கிறோம்; பேட்டி கண்ட ஒரு வாரம் வரையிலும் அதைப்பற்றியே கைதி பேசிக் கொண்டிருப்பான். அடைபட்டுக் கிடக்கும் ஒரு கைதிக்கு அவ்வப்போது உறவினர்களைக் காணும் இந்தச் சிறிய உரிமை கூட இல்லாது போய் விடுமாயின் அவனுக்குப் பித்தம் பிடித்து விடுமென்றும் கூறலாம். கைதிக்குக் கடிதம் வரும் சமயமும் இன்பந் தருவதாகும். ஒரு கைதிக்குக் கடிதம் வந்தால் அவனைச் சூழ்ந்து நின்று கொண்டு படிக்கச் சொல்லி அத்தனை கைதிகளும் சந்தோஷப்படுவார்கள். வெறுமனே சர்க்கார் சம்பளம் வாங்கித் தின்று திரியும் அதிகாரவர்க்கம் கைதியின் மனோ பாவங்களை அறியுமா? நிற்க,

'எல்லைப்புற காந்தி' என்று நம்மவரால் போற்றப்படும் கான் அப்துல் காபர்கானும் அவரது சகோதரரான டாக்டர் கான்சாகேபும் வடக்கே ஹஸாரிபாக் சிறையில் வைக்கப் பட்டிருக்கின்றனராம். இதர ராஜீய கைதிகளினின்று அவர்களைப் பிரித்து வைத்திருக்கின்றனராம். உறவினர்களைப் பேட்டி காண்பதற்கும் அநுமதி யில்லையாம். வருகின்ற கடிதங்களையும் அவர்களுக்குக் கொடுப்பதில்லையாம். 'லீடர்' பத்திரிகையில் இச் செய்தியைப் படித்தபோது மனங் குமுறிற்று. தேசத்தின் மாபெருந் தலைவனொருவனை, முஸ்லீம்களின் குல விளக்கை இந்த மாதிரி அரசாங்கம் நடத்துவது சரியா? இதனால் அந்தக் கைதிகளுக்கு சித்தப் பிரமை யேற்பட்டு விட்டதானால் அதற்கு யார் பொறுப்பாளி? இந்தச் செய்தியைக் கேட்ட ஜனங்கள், சர்க்காரை வெறுப்பார்களா? வாழ்த்துவார்களா? இதை யெல்லாம் ஏன் அதிகாரவர்க்கம் சிந்திக்கக் கூடாது?

கைதி ஜாப்தா

கல்கத்தா காங்கிரஸ் சம்பந்தமாக பாரத நாடு முற்றிலும் சேர்த்து சுமார் 1200 தொண்டர்கள் கைது செய்யப் பட்டார்களென்று தெரிகிறது. இந்தக் கைதி ஜாப்தாவில் முக்கிய மானவர்களின் பெயர்களாவன.

மதன் மோகன் மாளவியா: (கல்கத்தா காங்கிரஸுக்கு தலைமை வகிக்கச் செல்லும் வழியில்)
எம். எஸ். ஆனே: (தற்காலக் காங்கிரஸ் தலைவர்)
டாக்டர் ஆலம்: (சிகிச்சைக்காக கல்கத்தா சென்றவர்)
ஸ்வரூபராணி நேரு: (தியாகி மோதிலால் நேருவை மணந்து, ஜவஹர்லாலை ஈன்றெடுத்த புண்யவதி)
ஊர்மிளா தேவி: (சித்தரஞ்சன தாசரின் சகோதரி)
பாக்யவதி தேவி: (பாபு ராஜேந்திர பிரசாதின் சகோதரி)
ஜோதிர்மய கங்கூலி: (கைதியான தினத்தில் கார்ப்போரேஷன் தேர்தலில் வெற்றி பெற்றவள்)
பிரதாப சந்திரர்: ('நாயக்' பத்திரிகை ஆசிரியர்)
சத்ய மஜூம்தார்: ('ஆனந்த பஜார்' ஆசிரியர்)
டாக்டர் ஸையத் மகமத்: (பிரபல முஸ்லீம் தலைவர்)
ரபியுதீன் கித்வாய்: (இன்னொரு முஸ்லீம் தலைவர்)
பண்டித கோவிந்த மாளவியா: (மாளவியாவின் குமாரர்)
ஸ்ரீதர மாளவியா: (மாளவியாவின் பேரக் குழந்தை)
கேசவதேவ் மாளவியா: (மாளவியாவின் உறவினர்)
பூபேந்திர நாத தத்தர்: (ஸ்வாமி விவேகானந்தரின் சகோதரர்)
சதீஸ்சந்திரதாஸ் குப்தா: (பிரபல கதர் ஊழியர்)
அமீதா தேவி, ஸுனீதா தேவி, பிரியம்வதா தேவி, ஹரிப்பிரியா தேவி, லீலாவதி கபூர், கங்காராணி தேவி முதலியோர் போன்று அநேக பெண்களும் கைதியானார்கள்.

பவானிபூரில் 209 பேரும், வட கல்கத்தாவில் 150 பேரும், ஹௌராவில் 98 பேரும், இதர இடங்களில் 100 பேரும் கைதியாயினராம். காளி கட்டத்தில் ஒரு முகாமில் மட்டும் 401 பேர் கைதியானார்களாம்.

கல்கத்தாவில் ஒவ்வொரு தோட்டத்தையும், திறந்த வெளியையும் சுற்றி போலீஸ் பாராபலமா யிருந்தது. வெளியூர்களினின்று வருகின்ற ஒவ்வொருவரையும் 'முப்டி' போலீஸ் வேவு பார்த்துக் கொண்டிருந்தது. காலாட் படைகளும், குதிரைப் படைகளும் ஊரைச் சுற்றிக் கொண்டிருந்தன. இவ்வளவு தடபுடல் செய்து கொண்டிருக்கும் போதே "எல்லாவற்றையும் அடக்கி விட்டோம்" என்று சீமைக்குத் தந்தி அடிக்கும் அதிகார வர்க்கத்தின் போக்கு வேடிக்கை யல்லவா?

போலீஸ்காரிச்சிகள்

ஸ்திரீகளை மிக்க கேவலமாக நடத்தி வந்த நாடுகளில் சினாவும் ஒன்று. அங்கு பெண் குழந்தைகளின் கால்கள் வளர்ச்சி யடையாத வாறு சிறு வயதிலேயே கட்டுக் கட்டிப் போட்டு விடுவது வழக்கமா யிருந்தது. ஆனால் அந்த நாட்டில் சுதந்திர வேகம் தோன்றிய பின்னர் பெண்களும் தங்கள் உரிமைகளை ஸ்தாபிக்க முன்வந்து விட்டனர். இன்றைக்கு சினாவின் இராணுவத்திலும் பெண்கள் வேலை செய்து வருகிறார்கள். மிஸ்-சூ-கான் என்ற ஓர் பெண் மணி 12 வருஷங்களாக ஓர் படையைத் தலைமை வகித்து நடத்தி வந்தாள். போரில் அவள், ஒருபோதும் தோல்வி யடைந்ததே யில்லை. ஆனால் அந்த நாட்டிலும் கிழக்கோட்டான்களின் முணு முணுப்பு இருந்துகொண்டு தானிருக்கிறது. "பெண்கள் கிளம்பி விட்டா ளல்லவோ! ஹரேம்! இனி உலகம் நாசமாகி விடும்!" என்று துக்குறிக் குரல்கள் கேட்டுக் கொண்டு தானிருக்கின்றன. ஆனால் அந்தக் குரல்களை 'யுவஜனம்' கேட்கத் தயாராயில்லை. கடைகளைப் பெண்களே நடத்துகின்றனர். கவர்ன்மெண்டு காரியாலயங்கள், இராணுவம், பள்ளிக்கூடம், எல்லாவற்றிலும் பெண்கள் வேலை செய்து வருகின்றனர். இப்போது சீன துரைத்தனம் இன்னொரு பெரிய முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது. பெண்களின் போலீஸ் படை யொன்றை சர்க்கார் ஏற்படுத்தப் போகின்றனர்.

ஐந்தாறு வருஷத்துக்குள் இவ்வளவு தூரம் சீனம் முன்னேறி வருவது உலகுக்கே ஆச்சரியத்தை உண்டாக்குகின்றது.

சினாவின் பெண்கள் போலீஸ் இலாகாவிலும், இராணுவத்திலும் வேலை செய்து முன்னேற்ற மடைந்து வருகின்றனர். ஆனால் இந்தியாவில் நமது சகோதரிகளோ வெண்டைக்காய் சாம்பார் பேச்சிலும், வளை வர்ணனைப் பேச்சிலும், ஊர் வம்பிலும் பொழுது போக்கிக் கொண்டிருக்கின்றனர். தன் வயிற்றுக்குக் கூட சம்பாதித்துக் கொள்ளத் திறமையின்றி, வெறுமனே புருஷன் சம்பளத்தைத் தின்று கொண்டிருப்பது என்ன நியாயம்? பணத்தின் அருமை தெரியாது நமது பெண்க ளிருப்பதற்கும் சோம்பேறித்தனமே காரணம்! தீனி தின்பதும், பிள்ளை பெறுவதையும் தவிர மனித ஜன்மத்துக்கு வேறு வேலையே யில்லையா?

மன்னார்குடி புஷ்ப மாலை!

(பியாரா எழுதியது)

"இலை, பூ, பழம், ஜலம் இவைகளில் எதையேனும் எவன் எனக்கு பக்தியுடன் சமர்ப்பிக்கின்றானோ அவனே எனது பக்தன்" என்று ராஜகோபாலன் கீதையில் கூறினான். ஆனால் ஒரு பூ மாலையை பக்தன் பகவானுக்குத் தருவதா, அல்லது பகவான் பக்தனுக்குத் தருவதா வென்று இப்போது ஒரு சந்தேகம்!

மன்னார்குடி, தென்னிந்தியாவில் பிரசித்த பெற்ற ஸ்தலம். வடகலை-தென்கலைச் சண்டை முதல் தீர்த்தச் சண்டை போன்று எவ்வளவோ சண்டைகள் கோர்ட்டுகளைப் பார்த்த குருக்ஷேத்ரம் அதுதான். இங்கு மாலைச் சண்டை யென்று ஒன்று புறப்படுமென யார் எதிர்பார்த்தார்கள்?

மன்னார்குடி ஸ்ரீ ராஜகோபால ஸ்வாமிக்கு அன்று வெண்ணைத் தாழி உத்ஸவம்; ஸ்வாமி இரண்டு மாலைகள் சாத்திக் கொண்டு வந்தாராம். அந்த மாலைகளில் ஒன்று தம்மைச் சேர வேண்டுமென்று ஒருவர் குதித்தாராம். யார் அவர்? ஹனுமார் கோயில் தர்மகர்த்தாவான அவர், உரிமையோடு குதித்ததில் ஆச்சரிய மென்ன? பகவானுடைய புஷ்ப மாலைக்கு ஹனுமார் தாஸருக்கு இல்லாத பாத்யதை யாருக்கு உண்டு? இந்தத் தகராரை எதிர்பார்த்து போலீசார், மாஜிஸ்திரேட் எல்லாரும் தயாரா யிருந்தனராம். ஊராரும் ஒரு பெரிய சம்பவத்தை எதிர் பார்த்துக் கொண்டிருந்தனராம். ஆனால் கடைசியில் சமாதானம் பேசி ஹனுமார் கோயில் தர்மகர்த்தாவுக்கு ஒரு மாலை கொடுக்கப்பட்டதாம்.

'பகவான்' மேலிருந்த பூ மாலையை ஒரு தீவிர 'பக்த'ருக்குக் கொடுப்பதில் எவரும் ஆக்ஷேபித்திருக்கத் தேவை யில்லை. ஆனால் அந்த மாலைக்காக அந்த ஆளும் அப்படி குதித்திருக்க வேண்டிய அவசியமு மில்லை. புஷ்ப மாலைகள் மீது அவருக்கு அவ்வளவு ஆசையிருக்குமானால் தினந்தோறும் அரை டஜன் மாலைகளைக் கழுத்தில் போட்டுக் கொண்டு தெருவில் உலாவிக் கொண்டிருக்கலாமே!

கோயில், 'குளம் முதலிய விஷயங்களில் 'எனது உரிமை' 'எனது உரிமை' என்று குதித்துக் கோர்ட்டேறும் இந்த ஜீவன்கள் பரந்த நோக்கோடு தேசிய விஷயமாக 'எனது உரிமை' 'எனது உரிமை' என்று கொண்டாடினால் எவ்வளவு நன்றாயிருக்கும்?

விந்தையான உலகத்தில்—

குதிரை வளர்த்தல்

ஒரு காலத்தில் குதிரை வளர்க்கும் தொழிலில் இந்தியா பெயர் பெற்றிருந்தது. "டெல்லி மட்டம்" என்ற ஜாதிக் குதிரை இந்தியாவின் பெருமையா யிருந்தது. ஆனால் மேனாட்டு மோகம் அதிகரிக்க அதிகரிக்க, இந்தியாவின் குதிரைத் தொழில் குறைந்து போய் விட்டது. 'ஏறு குதிரை' என்றால் என்ன வென்று நமது இளைஞர்களுக்கு இனி தெரியாது போனாலும் போகலாம். வெளி நாட்டினின்று இறக்குமதியாகி, பந்தய ரவுண்டுகளில் ஓடும் குதிரைகள் தான் தேசத்தில் விசேஷமாகக் காணப்படுகின்றன. "குதிரை குட்டி போடுமா? முட்டையிடுமா?" என்று நமது சந்ததியார் சந்தேகப் பட்டாலும் படுவார்களோ என்னவோ? எவ்வளவோ தேசியத் தொழிலைக் கொன்றது போல, இந்த குதிரைத் - தொழிலையும் மேனாட்டு மோகம் கொன்று விட்டது. இந்தத் தொழில் மீண்டும் நம் நாட்டில் வளர வேண்டுமாயின் அந்நிய நாட்டினின்று இறக்குமதியாகும் குதிரைகளின் மீது சர்க்கார் அதிக வரி போட வேண்டுமென டாக்டர் தாக்கர் என்பவர் ஓர் அரிய கட்டுரை எழுதி யிருக்கிறார். இந்தத் தொழில் மீண்டும் நமது நாட்டில் ஓங்குமா?

ஹோட்டலும், கிராமபோனும்

"கதவைத் திறவாய்!", "பூங்கா விநோதமே" "பறி கொடுத்தோமே" "செந்தூர் வேலாண்டி" என்று ஒவ்வொரு காப்பி ஹோட்டலிலும் கிராமபோன்கள் 'லபோ திபோ' வென்று கூக்குரலிடுகின்றன. இந்த மாதிரி கிராமபோன் பிளேட்டுகளை இலவசமாக ஊரார் செவியுறுவதால் சில காதுகளுக்குத் தொந்தரவு. மேலும் பிளேட்டுகள் அதிகமாக விற்பனை யாவது மில்லையாம். சீமையிலும் ஒவ்வொரு ஹோட்டலிலும் இந்தக் கூற்று உண்டு. ஆகவே அங்கு எச். எம். வி. கிராமபோன் கம்பெனியார், அங்குள்ள ஒரு ஹோட்டல்காரர் மீது வழக்குத் தொடுத்திருக்கிறார்களாம். 'காபிரைட்' ஆக்டின் கீழ் இனி இனாமாக பிளேட் வைக்கக் கூடாதென வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது. சீமையில் இந்த வழக்கு ஜெயித்து விட்டால் உலகத்திலுள்ள ஹோட்டல்களின் கிராமபோன் கூக்குரல், கொஞ்சமாவது குறைவதற்கு இடமுண்டல்லவா?

சாக்கடையருகில் சந்தோஷம்!

பிளாக்பர்ன் என்ற ஊரின் பாதிரியார் தற்கால நாவல்களையும் சினிமாக்களையும் கண்டித்து ஓர் கட்டுரை எழுதி யிருக்கிறார்.

"ஆண்-பெண் வித்தியாசம் தடுமாறிப் போவதை நாவலில் எழுதி ஒரு சிலர் சந்தோஷப் படுகின்றார்கள். சிலர் சினிமாக்களில் காட்டி சந்தோஷப்படுகின்றார்கள். இது எப்படி யிருக்கிறது தெரியுமா? ஒவ்வொரு நகரத்திலும் ஒரு பெரிய சாக்கடை யிருந்தே ஆகவேண்டும். இருக்கவும் இருக்கிறது. ஆனால் அதன் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு நாம் களியாட்டம் செய்ய மாட்டோம். ஆனால் நவீன நாவல்காரனும், சினிமாக்காரனும் ஆபாசமான சாக்கடையருகில் உட்கார்ந்து கொண்டு சந்தோஷ சாகரத்தில் அமிழ்ந்து கிடக்கின்றான். எனக்கு அப்படித்தான் தோன்றுகிறது. கதைகளை எழுத எவ்வளவோ விஷயங்களிருக்கும் போது ஆண் பெண் விஷயம் மட்டும் இந்த மூடர்களின் கண் முன்னே நிற்பானேன்?" என்று அவர் எழுதி யிருக்கிறார்.

தித்திக்கும் சமாசாரம்!

இந்தியாவில் நாம் வருடா வருடம் எவ்வளவு தித்திப்பு அநுபவிக்கிறோம் என்ற கணக்கு ருசிகரமானது தான்.

வெல்லமாகவும் சிகப்புச் சர்க்கரையாகவும்	2,766,000	டன்கள்
இந்திய வெள்ளைச் சர்க்கரை	119,000	,,
இறக்குமதியாகும் வெள்ளைச் சர்க்கரை	800,000	,,

இந்த வெள்ளைச் சர்க்கரை மோகத்தால் ஏராளமான காசு இந்தியாவை விட்டுப் போய்க் கொண்டிருப்பதும் தித்திப்பான சமாசாரமா? அத்தனை காசும் இந்தியாவிலேயே தங்கினால் அன்றோ சமாசாரம் தித்திக்கும். வெல்லம் தயாரிப்பதில் இந்தியாவில் பீஹார் மாகாணம் தலைமை வகிக்கின்றது. வருடந்தோறும் 304,000 டன் அங்கு உற்பத்தி யாகிறது. சென்னை மாகாணத்தில் 284,000 டன்தான் உற்பத்தி செய்கிறோம். ஆனால் அடுத்த வருடத்தில் இன்னும் 8000 ஏகரா அதிகமாக கரும்புத் தோட்டங்கள் ஏற்படப் போவதால் சென்னை மாகாணத்திலும் வெல்ல உற்பத்தி அதிகமாகுமென்று எதிர் பார்க்கப்படுகிறது. ஆனால் என்னவாகுமோ!

சட்ட மறுப்புக் கைதிகள்

பிப்ரவரி மாதம் முடிய சிறைகளிலிருக்கும் சட்ட மறுப்புக் கைதிகளின் தொகை 13,674 அவர்களில் ஸ்திரீகள் 633. விபரம் :—

வங்காளம் 1586, பம்பாய் 3441, சென்னை 1034, பஞ்சாப் 240, ஐக்கிய மாகாணம் 2665 பீகார் 2434, மத்திய மாகாணம் 181, அஸ்ஸாம் 197, எல்லைப்புற மாகாணம் 1651, டெல்லி 125, குடகு 92, ஆஜ்மீர் 25, மீவாரா 28.

மசூலிப்பட்டணத்தில் கள்ளுக்கடை மறியல் செய்ததற்காக 3 ஸ்திரீகள் கைது செய்யப்பட்டனர்.

பம்பாயிலும், ஆமதாபாத்திலும் காங்கிரஸ் தினத்தில் 9 பேர் கைதி. காந்திஜியின் பேரன் காந்திலாலின் தலைமையில் 30 காங்கிரஸ்காரர்கள் கல்கத்தாவுக்குச் சென்றார்கள். ஒரு தொண்டர் ஆமதாபாத் கோர்ட்டிற்குச் சென்று மாஜிஸ்திரேட்டின் ஆசனத்தருகில் சில துண்டுப் பிரசுரங்களை வைத்து விட்டு, காலரியிலும் பிரசுரத்தை வழங்கியதற்கு கைது செய்யப்பட்டான்.

கல்கத்தாவில் காங்கிரஸ் கூடுவதைப் பற்றியும், பிரதிநிதிகள் கைது செய்யப்படுவதைப் பற்றியும் வங்காள சட்ட சபையில் சரமாரியாக கேட்ட கேள்விகளுக்கு; காங்கிரஸ் சட்ட விரோதமான ஸ்தாபன மென்று அறிவிக்கப் படவில்லை யென்றும், வங்காள பொது பந்தோபஸ்து மசோதாப்படி சிலர் கைது செய்யப்பட்டிருப்பதாயும் பதில் கூறப்பட்டது.

லாகூரில் 4 பேருக்குத் தண்டனை. பெஷாவாரில் 26 செஞ்சட்டையினர் கைதியாயினர். பெஷாவாரில் சில செஞ்சட்டையினர் புரட்சிக் கோஷ்டிகளைக் கிளப்பி விடுவதால் அமைதிக்குப் பங்கம் வருமெனக் கருதி ஒரு கிராமத்துக்கு 200 அபராதம் போடப்பட்டிருக்கிறது.

பண்டித மாளவியா கைதியானதற்காக காசி சர்வ கலாசாலையின் எல்லா காலேஜுகளும் மூடப்பட்டன. பரீக்ஷையும் ஒத்தி வைக்கப்பட்டது. கராச்சி மார்க்கட்டு, பம்பாய் கடைகளும் மூடப் பட்டன.

சீனர்கள் ஜப்பானியர்களைக் கடுமையாகத் தாக்க வாரம்பித்திருக்கின்றனர். நெருக்கடியான நிலைமை ஏற்படலாமாம்.

தரித்திர ஜப்திகள்

'கர்நாடகம்' என்ற சொல்லை ஒரு கேலியாகச் சொல்வதுண்டு. காரணம் என்னவென்றால் எந்த விஷயத்திலும் கர்நாடகப் பிராந்தியம் பிற்போக்காகவே இருந்து கொண்டிருந்தது. ஆனால் அந்தப் பிராந்தியங்களில் வரிச் சுமை அதிகரிக்க அதிகரிக்க, வறுமையும் அதிகரித்துக்கொண்டு வரவே, இன்று இராஜீய அறிவு அப்பிராந்தியத்தில் கொழுந்து விட்டு எரிகின்றது. போலீஸ் கலாட்டாவும் அங்கு ஒப்பந்த பாடில்லை. தார்வாடிலிருந்து வந்துள்ள ஓர் செய்தியைப் பார்த்தால் 'இத்தனை தரித்திர புத்தியோடு அதிகாரிகள் அங்கு நடந்துகொண்டார்களா?' என்று அதிசயிக்க வேண்டியிருக்கிறது. 'கங்கேல்' என்ற கிராமத்தில் ஒருவர் வீட்டில் புகுந்து, சோதனை போட்டு 2½ அணாவைப் போலீசார் ஜப்தி செய்தார்களாம்! இன்னொரு வீட்டில் 8 ரூ. பொறுமானமுள்ள சரிகையையும் 3½ அணாவையும் ஜப்தி செய்தார்களாம்! வேறொரு வீட்டில் ஒரு கை விளக்கை ஜப்தி செய்தார்களாம். பிறகொருவருடைய 5 ரூபா நெல்லை ஜப்தி செய்தார்களாம். ஜப்தி செய்யப்பட்ட சாமான்களைப் பார்த்தாலே கிராமத்தின் வறுமை விளங்கும்! ஆனால் அதையும் விடமாட்டோ மென்கிறார்கள். 'தாராள' புத்தியுள்ள அதிகாரிகள்!

தோற்றவர் மீண்டும் வர

பம்பாய் முனிஸிபல் தேர்தலில் ஸ்ரீயுத தாருக்கர் என்ற ஹரிஜனப் பிரதிநிதி தோற்றுவிட்டாராம். வெற்றியடைந்த 'பப்ரகர்' என்ற மேல் ஜாதி ஹிந்து, தமது ஸ்தானத்தை விட்டுக் கொடுக்க வேண்டு மென்று சில ஹரிஜனங்கள் ஏரவாடாவிலுள்ள காந்திஜிக்கு மகஜர் அனுப்பி யிருக்கிறார்களாம்! இதென்ன சங்கடம்? சிறையிலுள்ள பொக்கை வாய்க் கிழவர் எலெக்ஷன் கோர்ட்டு நடத்துகிறாரென்று நினைத்துக் கொண்டார்கள் போலும்!

Edited and Published by S. Subramaniam and
Printed by M. R. Seshan, at the Lunar Printing Press, Triplicane, Madras.